# <u>கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்</u>

கொண்டாடுவோம் நாம் கொண்டாடுவோம்
கர்த்தர் இயேசு பிறந்த நாளை கொண்டாடுவோம்

பாவ உலகில் பிறந்திட்டாரே கொண்டாடுவோம்
பாவி நம்மை மீட்க வந்தார் கொண்டாடுவோம்
சாபங்களை முறிக்க வந்தார் கொண்டாடுவோம்
சாத்தானை ஜெயிக்க வந்தார் கொண்டாடுவோம்

கூடி வாருங்கள் ஆடி பாடுங்கள்
பெத்தலகேம் முன்னணையில் கொண்டாட்டமே
நம் ஊர் எங்கும் தோரணங்கள் ஆர்ப்பாட்டமே

இரட்சிப்பை அருளினார் கொண்டாடுவோம்
நித்திய வாழ்வு அருளினார் கொண்டாடுவோம்
சமாதானம் அருளினார் கொண்டாடுவோம்
முடிவில்லாத வாழ்வு தந்தார் கொண்டாடுவோம்

அகில உலகம் படைத்தவரை கொண்டாடுவோம்
அகில உலக இரட்சகரை கொண்டாடுவோம்
ஆட்டுக்குட்டியானவரை கொண்டாடுவோம்
ஆனந்தமாய் பாட்டு பாடிக் கொண்டாடுவோம்